www.Padasalai.Net www.CBSEtips.in

# 12 - ஆம் வகுப்பு - தமிழ்
## காலாண்டுத் தேர்வு - விடை - 2023

### பகுதி - I

1) இ) தொல்காப்பியம்
2) அ) தி.சு. நடராசன்
3) அ) பொருட்சிறப்பு
4) இ) 12
5) ஆ) இராமாவதாரம்
6) ஈ) இவை அனைத்தும்
7) இ) வேலூர்
8) இ) கல்லூக் தொடக்கம்
9) ஆ) காவியம்
10) இ) இரண்டு பண்பு
11) ஆ) திருஞானசம்பந்தர்
12) இ) காட்சி
13) ஆ) தோப்பில் முகமது மீரான்
14) இ) கடுக்காய்

### பகுதி - II பிரிவு - I

15) i) கதிரவன் மாலையில் மறையும் போது, சிவந்த வானம் பூக்காடாய்க் காட்சியளிக்கும்.
ii) அவ்வானத்தின் செந்நிறத்தைப்போல் உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் சிவந்திருக்கும்.
iii) அத்தொழிலாளர்கள் தோளின்மீது முத்துமுத்தாய் வியர்வை துளிகள் வழிந்திருக்கும்.

16) i) நகரத்தில் மழைபெய்து கொண்டிருந்த வேளையில் சூரியன் திடீரென்று உதயமானான்.
ii) பெய்த மழையால் நகரத்துச் சுவர்களில் ஒட்டியிருந்த அழுக்குகளும், தூசிகளும் கழுவப்பட்டன.
iii) கழுவப்பட்ட சுவர்களின் மீது சூரியனின் வெளிச்சக் கதிர்கள் பட்டதால் நகரமானது பட்டை தீட்டிய வெள்ளை வைரமாக மின்னியது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

17) * கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம்
* அதனை வெளிப்படுத்தும் வண்ணம்
* எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை.

18) * சினத்தைக் காக்க வேண்டும்
* ஏனென்றால் சினம் நம்மையே அழித்து விடும்.

## பகுதி - 2

19) புக்கில் :
தற்காலிகமாகத் தங்குமிடம் 'புக்கில்' எனப்படும்.

தன்மனை :
திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடம் இருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் '~~தன்மனை~~' ~~எனப்படும்~~. தன்மனை எனப்படும்.

20) i) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் சென்னையிலுள்ள பழமையான புகழ்வாய்ந்த நூலகமாகும்.
ii) இந்நூலகம், காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869 - இல் உருவாக்கப்பட்டது.
iii) இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

21) i) நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.
ii) புயல், வெள்ளம், தீவிபத்து முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
iii) ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர் காலங்களில் செயலாற்ற

www.Padasalai.Net www.CBSEtips.in

பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

பகுதி - 3

22) தலை, தளை, தழை

காட்டிற்குச் சென்ற கந்தன் வெட்டிய இலை தழைகளை கயிற்றைக் கொண்டு தளைத்து தலைக்கு மேல் வைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

23) ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லவற்றைக் கற்றுக் ~~கொண்~~ கொடுக்கும்.

24) தாமரை

* தாமரைகள் பூத்தால் குளத்துக்கு அழகு
* தா மரைகள் குதித்தால் கண்ணுக்கு அழகு.

25) Departure - புறப்பாடு
Arrival - வருகை

26) நிலத்தைக் கிளற வேண்டுமடா! அப்போதுதான் வயிறு நிறையும்.

27) வெங்கதிர் = பண்புத்தொகை
வெரீஇய = சொல்லிசை அளபெடை

28) இனநிரை = இனம் + நிரை
விதி : மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
இன + நிரை
= இனநிரை

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

தனியாழி = தனி + ஆழி

விதி : இ, ஈ, ஐ வழி யவ்வும் = தனி + ய் + ஆழி

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது

இயல்பே = தனியாழி

30) புதுமைப்பித்தன்

பகுதி - III பிரிவு - I

31) இடம் :

தண்டியலங்கார நூலில் பொருளணியியல் பகுதியில் இடம் பெற்ற பாடல் காணப்படும் வரி இது.

பொருள் :

சூரியனும் நிலவும் விளக்குகின்ற நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தின் இருளை அகற்றும் என்பது இதன் பொருளாகும்.

விளக்கம் :

பொதிகை மலையில் தோன்றி சான்றோரால் தொழப்பட்டு மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புமை இல்லாததாக இருப்பது தமிழ்.

32) * வாடைக்காலத்தில் பெய்த பெருமழையால் வெள்ளம் பெருகியது

* கோவலர்கள், தாங்கள் மேய்த்துவந்த எருமை, பசு, ஆடு முதலியவற்றை தாழ்வான பகுதியிலிருந்து மேடான நிலங்களுக்கு ஓட்டிச் சென்றனர்.

* மலைப் பகுதியைக் குளிரச் செய்யும் அளவுக்கு மழைக்கால நலிவரவு இருந்தது.

* எனினும் அவர்களின் பசுக்கள் கடுங்குளிரால் நடுங்கின.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

SPB
DATE :

33) * கழுகு வேந்தன் சடாயு. இராவணன் சீதையைச் சிறை எடுத்துச் சென்றபோது அவனைத் தடுத்து அவனோடு போரிட்டு இறந்தான்.
* தேவையான அளவு தசையைப் புலிகளையும் புசிக்கவிட அனுப்பினான்.
* மக்களைக் கொன்று வந்த தூவியனை.

34) * மிளிர்ந்த மகத்தோம்பக்கூறை உடைய தாய மாணிக்க மணியே!
* அம்மணிகளுள் அருள் நிறைந்த சைவமணியே!
* உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்களுடைய உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்.

பிரிவு - 2

35) வித்யாரம்பம் :

முதன் முதலில் ஐந்தாம் வயதில் வித்யாப் பியாசம் செய்யும் போது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுக்க வந்தார்கள்

சிறை வைப்பது :

உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்பது' என்று கூறுவார்கள்.

36) * சங்ககாலத்தில் தனிக்குடும்ப அமைப்பு தோன்றி பெற்று இவர்களுடன் பெற்றோர் இருவரின் தந்தையும் உள்ளடக்கும் 'விரிந்த குடும்ப' முறையையும் காண முடிகிறது.
* கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்த வாழ்ந்த சேர்வழி குடும்ப முறையை ஒக்கூர் மாசாத்தியார் பாடலில் காணலாம்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

SPB
DATE :

37) * "கடந்தடு தானை மூவிருங்கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே'
வன்மையான உணர்ச்சியைக் காட்டுகின்ற பாடலில் கரடு முரடாய வல்லின எழுத்துகள் அதிகமாக வருகின்றன.

* "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
நெடில் ஒலிகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

38) * சென்னை எழும்பூர் அருங்காட்சியமும், கோவை அருங்காட்சியகமும் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன.
* சென்னை இந்திய தொல்லியல் நிலையம்,
* எழும்பூர் தொல்லியல் நிலையம்,
* சென்னை கன்னிமாரா நூலகம் போன்றவை பண்டைய பண்பாட்டை விளக்கி நிற்கின்றன.

பிரிவு - 3

39) இக்குறட்பாவில் நிரல் நிறை அணி பயின்று வந்துள்ளது.

விளக்கம்:
நிரல் = வரிசை, நிறை = நிறுத்துதல்
சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே பொருள் கொள்வது நிரல் நிறை அணி.

பாடலின் பொருள்:
இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

DATE :

அணிப்பொருத்தம் :

இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி பண்பும் பயனும் என்ற சொற்களை முறைப்படுத்தியுள்ளதால் இது நிரல் நிறை அணி ஆயிற்று.

42) 1) ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்

2) இன்றைக்குச் சாயுங்காலம் தங்கை வருவாள்

3) அரசர்கள் வெள்ளிகலப் பாத்திரங்களை வைத்திருக்கி

4) எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.

43) 1) புதிய மொழியைக் கற்கும்போது புதிதாய்ப் பிறக்கின்றோம்.

2) மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர்கள் மொழியில் உரையாடு.

3) மொழி அறிவு ஞானத்தின் வழி.

4) மொழியறிவின் எல்லையே உனது உலக அறிவின் எல்லை.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com